# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16314/E/2019**

திருமதி.V.அழியா நாச்சியார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 04.02.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருமணம் ஆகாத தனது தம்பி கே.பூமிநாதன் என்பவர் 12.12.2017 அன்று இறந்துவிட்டதாகவும், தனது தம்பிக்கு முன்பாக தனது தந்தை கருப்பையாத் தேவர் என்பவர் 31.12.2020 இறந்தநிலையில் பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் தேதி 21.03.2016 ப.மு.எண்.அ3/1871/2016 வ.எண்.326/2016-ல் தனது தம்பி திருமணம் ஆகாதவர் என்று சான்று வழங்கியிருப்பதாகவும், மேற்கண்ட அதே தேதி, அதே எண், அதே வ.எண்-ல் திருமணம் ஆனவர் என்று மற்றொரு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வாரிசு சான்றிதழ் வழங்குவதற்குண்டான வருவாய்த் துறையின் நடைமுறைகள், இறந்து போன நபரின் வாரிசுகள் திருமணம் ஆனவர், ஆகாதவர் என்ற விபரத்தை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் முடிவு செய்து வாரிசு சான்றிதழ் வழங்கப்படுகிறது, கிராம நிர்வாக அலுவலர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் உள்ளிட்ட 9 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாத காரணத்தால், மேல்முறையீட்டாளர் 07.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 15.02.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட இருந்த நிலையில், அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 16.09.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளருக்கு 10.02.2020 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் 16.10.2020 அன்று அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி, ஆவணங்களை பார்வையிட்டு, வேண்டிய தேவையான தகவல்களை பெற்றுக் கொண்டு ஏற்பளிப்பு செய்ததாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்து அளித்த கடிதத்தின் நகலை அனுப்பி வைத்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளர் தகவல்களை பெற்றுக் கொண்டதாக ஏற்பளிப்பு செய்ததுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1631/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

திருமதி.V.அழியா நாச்சியார்
க/பெ.B.வெள்ளைச்சாமி,
21, காந்திபுரம் 4வது தெரு,
கே.புதூர், மதுரை-625 007.

Copy to: File
RJ/PS 06.11.2020